சிறப்பிதழ்
Special Issue

2-ஆடி 2050
18-July 2019

ISSN : 2321-0737

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*
*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*
*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. Oppila Mathivanan*
*Dr. R. Rajagopal*
*Dr. Aranga. Pari*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Rajaram*
*Dr. R. Velmurugan*
*Dr. S. Chitra*
*Dr. E.R. Ravichandran*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. K. Thilagavathi*
*Dr. P. Velmurugan*
*Dr. G. Sheik Meeran*
*Dr. P. Selvakumar*
*Dr. M. Karunanithi*
*Dr. A. Kaleel Rahman*
*Dr. A. Senthil Kumar*
*Dr. S. Tamil Velu*
*Dr. M. Arunachalam*
*Dr. R.Vijayarani*
*Dr. V. Dhanalakshmi*
*Dr. S. Ramesh*
*Dr. J. Chandrakala*
*Dr. C. Prabhakaran*
*Dr. P. Santhi*
*Prof. Balasundaram Elayathamby*
*Dr. A. Thoufiq Rameez*
*Dr. S. Bharathi Prakash*
*Dr. J. Raja*
*Dr. J. Selva Kumar*
*Dr. D. Alagudurai*
*Dr. Chandrika Subramaniyan*
*Dr. Manivannan Murugesan*
*Dr. V. Kalathi*
*Mr. G. Senthil*

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்
UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL
UGC Journal No.40719

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)
(கலை & மனிதவியல்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)
(Arts & Humanities)

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019
தமிழ்த்துறை (தன்நிதி)
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)
பொள்ளாச்சி – 642 001, தமிழ்நாடு, இந்தியா.

## தமிழ் இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
உதவிப்பேராசிரியர்

பதிப்புக்குழு உறுப்பினர்கள்
முனைவர் த. பரமேஸ்வரி (துறைத்தலைவர்)
முனைவர் த. கீதாஞ்சலி முனைவர் ந. பிரகாஷ் முனைவர் இரா. ஜெயந்தி பேரா. அ. மகபூபு
முனைவர் ம. சித்ரகலா முனைவர் மு. சுகந்தி பேரா. ர. சூர்யா முனைவர் ந. ஜெயசுதா
தமிழ்த்துறை (தன்நிதி), நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி –6

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

4 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

| | | | |
|---|---|---|---|
| 95. | ந. வெங்கடேஷ் | திருக்குறளில் மனித மாண்புகள் | 346-348 |
| 96. | சு.நளினி | சங்கப் பாடல்களில் மனிதநேயம் | 349-351 |
| 97. | சௌ. மைதிலி | மணிமேகலை உணர்த்தும் மனிதநேயம் | 352-355 |
| 98. | ஜோ. ஜீவா | மனித நேய நோக்கில் மலர்வதியின் 'காத்திருந்த கருப்பாயி' நாவல் | 356-358 |
| 99. | டு. ஜோஸ் விஜி | நீலபத்மநாபன் கவிதைகளில் மனிதநேய மாண்புகளின் இழப்பு | 359-362 |
| 100. | B.S.ஆஷா | குறுந்தொகையில் திணைசார் மக்களின் மனித நேய மாண்புகள் | 363-365 |
| 101. | அ.மகபூபூ, | சிலப்பதிகார மாந்தர்களின் மனிதநேயமாண்புகள் | 366-369 |
| 102. | பொ.மா.பழனிசாமி | தமிழ் இலக்கியத்தில் மனிதநேய வாழ்வியல் மதிப்புகள் | 370-374 |
| 103. | பா.அருள்ஜோதி | சங்க புறப்பாடல்களில் மனித நேய சிந்தனைகள் | 375-379 |
| 104. | ம.சித்ரகலா | சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள் | 380-385 |
| 105. | அமுதன் | இலக்கியத்தில் மனித நேயம் தமிழ் இலக்கியங்களை முன்வைத்து | 386-389 |
| 106. | S.Jagadambal & Dr. K. Perumal | Spirituality Fosters Humanity | 390-393 |
| 107. | டாக்டர். சு.பிரசாத் & செ.சண்முகவடிவு | சித்தர் இலக்கியங்களில் மனிதநேயம் | 394-399 |
| 108. | த. மகிலா ஜெனி | விவேக சிந்தாமணியில் மனித நேயம் | 400-403 |
| 109. | த.ரதீஸ் | இலக்கியத்தில் மனிதநேயம் | 404-407 |
| 110. | ர.மாலதி ரவீந்திரன் | சங்க இலக்கியங்களில் மனிதநேயம் | 408-410 |
| 111. | திருமதி.க.தேவி | இலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள் | 411-416 |
| 112. | ந.ஜெயசுதா | இலக்கியங்களில் மனிதநேயம் | 417-419 |
| 113. | இரா.ஜெயந்தி | திருக்குறள் காட்டும் மனிதநேயக் கருத்தாக்கம் | 420-423 |
| 114. | க. உஷா | திருக்குறளும் மனித மாண்புகளும் | 424-427 |
| 115. | D. ஞானசௌந்தரி | கீதைகூறும்ஞானம் | 428-432 |
| 116. | க.முத்துஇலக்குமி | பாரதியார் கவிதைகளில் மனிதநேயப்பண்பு | 433-436 |
| 117. | க.தனலட்சுமி | தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம் | 437-439 |
| 118. | பொ.வீரசித்திவிநாயகன் | இலக்கியங்களில் திருக்குறள் உணர்த்தும் மனிதநேயமும் மருத்துவமும் | 440-442 |
| 119. | மு.சுகந்தி | புறநானூற்றுப் பாடல்களில் மனிதநேயம் | 443-446 |
| 120. | த.பரமேஸ்வரி | புதுக்கவிதைகள் உணர்த்தும் புரையோடிய மனிதநேயம் | 447-450 |
| 121. | பேரா ர.சூர்யா | மனிதநேயச் சிந்தனைகள் | 451-453 |
| 122. | மு.அபிநயா | கருவறைவாசனையில் பெண்ணுலகம் | 454-456 |
| 123. | ஜோதிமணி.து | காட்டுக்குட்டியில் மாண்டுபோகும் மனிதநேயம் | 457-460 |
| 124. | இரா.விஷ்ணுப்பிரியா | புலமையும் மனிதநேயமும் | 461-469 |
| 125. | திலகவதி பு | புகழேந்தி புலவர் இயற்றிய நல்லதங்காள் கதையில் மானுடம் | 470-473 |

# சுந்தரகாண்டத்தில் மனிதநேய மாண்புகள்

முனைவர் ம.சித்ரகலா
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை(சுயநிதி), ந.க.ம.கல்லூரி,பொள்ளாச்சி.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார் கணியன் பூங்குன்றனார். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்றார் வள்ளலார். தெய்வப்புலவர் திருவள்ளுவரோ அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார் மறத்திற்கும் அஃதே துணை என்றார். முண்டாசுக் கவிஞன் பாரதியாரோ 'காக்கை குருவி எங்கள் ஜாதி நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்றார். பாரதிக்குத் தாசனோ 'மனிதரெல்லாம் [illegible]கள்' என்றார். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரனாரோ 'மனிதரை மனிதர் சரிநிகர் சமானமாய் மதித்தல் வேண்டும் என்றார். இப்படி தமிழ் இலக்கியங்கள் மனிதநேயம் காக்க பல்வேறு படைப்புகளைப் படைத்தது. மனிதனை மனிதன் மதித்து அன்பு காட்டுவதோடு மட்டுமல்லாமல் பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டும் பகுத்தறிவாளனாகத் திகழ்வதே மனித நேயச் சிறப்பு என்பதனை,

**இந்த உலகில் நாம் நம் கண் முன்னால் காணும்**
**ஒவ்வொருவரையும் நேசிக்க இயலவில்லை என்றால்**
**கண்ணுக்குத் தென்படாத கடவுளிடம் எவ்வாறு**
**அன்பை செலுத்த இயலும்**

என்று மனித நேயப் பண்பைக் கருணைக்கடல் அன்னை தெரசா தெளிவுபடுத்துகின்றார். இம்மனிதநேயப்பண்பு மனிதனை பிற உயிர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டும். ஆக அனைத்து உயிர்களிடமும் அன்பும் இரக்கமும் காட்டக் கூடிய நிலையையே மனித நேயம் என்கிறோம். இதன்வழி கம்பராமாயணத்தில் ஐந்தாவது காண்டமான சுந்தரகாண்டத்தில் காணலாகும் மனிதநேயப்பண்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சுந்தர காண்டம்

சுந்தரம் என்னும் சொல்லுக்கு அழகு, வனப்பு, நிறம் திருதன்மை, நன்மை என மதுரைத்தமிழ் பேரகராதி விளக்கம் தருகிறது. கண்ணுக்குத் தோன்றிய அழகை மட்டும் சுந்தரம் என்று கூறுவதோடு அல்லாமல் வாழ்வுக்கும் உறவுக்கும் நன்மை அளிக்கும் செயல்களையும் சுந்தரம் என்று கூறலாம். பாரதியார் மொழியை,'சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து' என்று பாடுகின்றார். திறம்பட அறிவுக்கூர்மையோடு செய்த செயலையும் சுந்தரம் எனலாம். அவ்வகையில் அனுமன் செய்த செயலை வியந்து கம்பராமாயணத்தில் கம்பர் ஐந்தாவது காண்டத்திற்கு சுந்தரகாண்டம் என பெயர் சூட்டியிருக்கிறார். கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் பருவத்தின் பெயரிலும், இடப்பெயரிலுமே அமைத்து ஒரு காண்டத்தை மட்டும் சொல்லின் செல்வனான அனுமனின் பெயரால் வைத்திருப்பதற்குக் காரணம் அனுமனின் செயற்கரிய செயலும் புத்திக்கூர்மையும், பண்புமிகு குணங்களுமே எனலாம். மனித நேயம் என்பது பிறரின் துயர் துடைப்பது. தீமைகளை அழிப்பது. அவ்வகையில் இராமன் பிறர் துயர் துடைப்பவன் என்பதை,'தீயோர் உளராகிய கால் அலர் தீமை தீர்ப்பான் மாயோன்' என்று கம்பர் கூறுகின்றார். அந்த சிறப்பு மிக்க இராமனை நெஞ்சில் தாங்கிய அனுமன் தீமையைத் தீர்ப்பவனாகவும் நலந்தரும்

செயலை செய்யும் பண்பாளனாகவும், அறிவாற்றல், விடாமுயற்சி, ஒரு செயலை வெற்றியுற முடிக்கும் வீரத்திறம் ஆகிய பண்புகளைக் கொண்டவராகவும் இருப்பதால் அனுமனின் உயிர்நேயத் தன்மையையும் சிறப்பையும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**உலக மக்களை துன்பத்திலிருந்து காத்தல்**

'எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே' என்றார் தாயுமானவர். அவரின் வயிர வரிகளுக்கு ஏற்ற எண்ணம் கொண்டவராக அனுமன் விளங்குகிறான். அனுமன் சூடாமணிப் படலத்தில் சீதாப்பிராட்டி இல்லாமல் வாழும் இராமபிரானின் துன்பத்தைப் போக்குவதோடு, அரக்கர் குலத்தை அழித்து இந்த உலகத்தின் துன்பத்தையும் போக்குவேன் என கூறுவதை,

**.....சிந்தைஉறு வெம்துயர் தவிர்ந்து தெளிவோடும்**
**அந்தம் இல் அரக்கர்குலம் அற்று அவிய நூறி**
**நந்தல்இல் புலிக்கண் இடர், பின் களைதல் நன்றால்**

(கம்ப. பா. 5460)

என்பதன்வழி அனுமன் உலக உயிர்களின் துன்பம் கண்டு வருந்தும் கருணை நேயன் என்பது விளங்கும்.

**சீதாப்பிராட்டி உள்ளத்தூய்மையும் நேயமும்**

தனக்குபின் தானம், தம் உயிர் போல் பிற உயிரையும் நேசித்தல் ஆகிய மனித நேயப் பண்பும் கருணை உள்ளமும் கொண்ட சீதாதேவி வனம்புகும் போது தான் அயோத்தியில் விட்டுவிட்டு வந்த கிளிக்காக ஏங்குகிறாள். பின் அக்கிளிகளை தங்கள் தங்கையர்களைப் பேணிப் பாதுகாக்குமாறு சுமத்திரனிடம் செல்லியனுப்புகிறாள் இவ்வாறு அஃறிணை உயிர்கள்மீதும் கருணை உள்ளம் கொண்ட சீதாப்பிராட்டி இராவணன் பொருட்டு சீறுகின்றாள். இது தற்காத்தல் மட்டுமல்ல. வஞ்சகர்கள் வஞ்சிக்கப்படவேண்டும் என்ற சூளுரை என்பதோடு ரௌத்திரம் பழகு என்ற பாரதியின் வாக்கு போல சீதா தேவி,

**அண்டர் எவரும் நோக்க என் ஆக்கையைக்**
**கண்டவாள் அரக்கன்விழி காகங்கள்**
**உண்டபோது அன்றி யான் உளேன் ஆலெனோ?**

என்று கூறுகிறாள். அரக்கியர்களும் சீதாதேவியைக் கொடுமைப்படுத்தியக் காரணத்தினாலும், இராவணன் செயலோடு மட்டுமின்றி மாரீச்சன் மற்றும் அரக்கர்களின் செயல்பாட்டு தீமையாலும் சீற்றம் கொள்கிறாள். மேலும் அரக்கியர்கள் தம் மூக்கும், கழுத்தும், மூக்குப் பொட்டும், மங்கல நாணும் இழக்க வேண்டும் என கூறுவதன்வழி அரக்கர்கள் அழிய வேண்டும் எனவும் தன் கற்பின்திறனை காட்ட வேண்டும் எனவும், இராமன் குலப்பெருமையை உலகுக்கு விளக்கவும் இவ்வாறுசூளுரைக்கிறாள் சீதாதேவி. அறநெறிப்படி வாழ்ந்து காட்ட இராமபிரான் மண்ணுலகுக்கு வந்தது போலவே சீதாதேவி பதிபக்தி எனும் கற்பு நெறிப்படி வாழ்ந்து காட்ட பூவுலகிற்கு வந்தாள் என்பதால் கற்பிற்கு கலங்கம் வரும் வேலையின் உயிர்நேயமற்று இருப்பவரை வருத்த சபதமிடுகிறாள். சீதாதேவியின் இச்செயல் பாரதியின் சீறுவோர் சீறு என்ற வரிகளுக்கு இலக்கணம் காட்டுவதோடு பிறரைத் துன்புறுத்தி இன்பம் காண்பவர்கள் உயிர் நேயமற்றவர்கள் அழியப்படவேண்டும் என்ற கருத்தும் தெளிவாகின்றது.

**பிற உயிரையும் தன் உயிர்போல் எண்ணல்**

மனித பிறவியை விடுத்து பிற உயிர்களின் உயிரையும் தன் உயிர்போல் கருதும்

மனித நேயம் போற்றத்தக்கது. அவ்வகையில் முல்லைக்கு தேர் கொடுத்த பாரி வள்ளல் தன்மையையும், மயிலுக்கு போர்வை நல்கிய நாரியையும், பறவையின் உயிருக்காக தன் தசையையே அருத்துக்கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியையும், பசுவிற்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழனும் எல்லா உயிரையும் தம் உயிர் போல் எண்ணல் வேண்டும் என்ற கருத்தை உலகுக்கு அளித்து உலக மக்களின் சிந்தையைச் சீர்படுத்திச் சென்றிருக்கின்றனர். சுந்தரகாண்டத்தில் கடல் தாவு படலத்தில் அனுமன் சீதாப்பிராட்டியைத் தேடி ஒவ்வொரு இடமாகச் செல்கிறான். அவனின் கால்பட்ட இடங்களில் அழுத்தம் ஏற்படுகின்றது. தன் கணவனோடு ஊடல் கொண்டு மலையில் வீற்றிருக்கும் தேவலோகப் பெண்கள் அனுமன் மலையைக் கடந்து செல்லும்போது ஏற்பட்ட அதிர்ச்சியால் அச்சம் அடைந்து விண்ணுலகம் சென்றுதன் கணவரைத் தழுவும் வேலையில் கூண்டில் அடைக்கப்பட்ட கிளியை எண்ணி வருந்துகின்றனர். இதனை,

'சீறி மனத்தர், தெய்வ / மடந்தையர் ஊடல் தீர்வுற்று / ஆறினா, அஞ்சுகின்றாா,/ அன்பதைத் தழுவி உம்பர் / ஏறினர், இட்டு, நீத்த / பைங் கிளிக்கு இரங்குகின்றார். (கம்ப. 4858)

என்பதை பாடல் விளக்கி நிற்கின்றது. கிளி பறந்து சென்று பிழைக்க முடியாதபடி கூட்டில் அடைத்ததை எண்ணி தேவலோகப் பெண்டிர் வருந்தியதை எண்ணும்போது இக்கால கட்டங்களில் கூண்டுக்குள் கிளியை அழகுக்காக அடைத்து வைத்து அதற்கு தேவையான உணவைக் கொடுக்காமல் அதன் சுதந்திரத்தைப் பறிப்பவர்களின் மனவோட்டம் ஆராயத்தக்கதாகிறது.

### மலை செய்நன்றி மறவாதிருத்தல்

உதவும் பண்பையும் நன்றி மாறாத பண்பையும் இயற்கை நமக்குக் கற்றுக் கொடுக்கின்றது என்பதை கம்பர் தெளிவுபடுத்துகிறார். இராமபிரானின் நெஞ்சில் நிறைந்தாளைத்த தேடி அனுமன் அனைத்து இடங்களுக்கும் செல்கிறான். அவ்வாறு செல்லும் போது கடலைக் கடக்கச் செல்கின்றான். அந்த நேரத்தில் மைந்நாகமலை மனித உருவேடுத்து வந்து அனுமனுக்கு உதவ முற்படுகின்றது. அம்மலை இந்திரனால் அழிவுபட இருந்த என்னை முற்காலத்தில் அனுமனின் தந்தையாகிய வாயு தேவன் காத்தான் என்றும் அனுமனே நீ இங்கு தங்கி இளைப்பாறி விட்டுச் செல்க என்றும் கூறுகின்றது. இம்மலை நன்றி மாறாப் பண்புடன் இருப்பதை என்னும்போது திருவள்ளுவனின் வாக்கில் வந்த,

**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விருமந் துடைத்தவர் நட்பு** (குறள். 117)

என்ற குறளுக்கும்

**பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது** (குறள். 113)

என்ற குறளுக்கும் இலக்கணம் போல நன்றியுணர்வுடன் வாழ வேண்டும் என்பதை இம்மலை கற்றுத்தருவதை,

**அன்னாள் அருங்காதலன் ஆதலின் அன்புதூண்ட**
**என்னால் உனக்கு ஈண்டு செயற்கு உரித்தாயது இன்மை**
**பொன்னார் சிகரத்து இறை ஆறினை போதி என்னா,** (கம்ப. 4795)

என்று கூறுகின்றது. இன்றைய கால கட்டத்தில் இந்நிலை மாறிவரும் சூழல் வருவதால் செய்நன்றி மாறா மனிதநேயப் பண்புபை இளம் பிஞ்சு மனதிலேயே பதியவைக்கும் கட்டாய சூழலில் நாம் இருப்பதால் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இப்பண்பை வலியுறுத்தும் கல்வியை மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதன்வழி நல்ல சமுதாயத்தை

உருவாக்குவோம் என்ற சிந்தனை மேலோங்குகின்றது.

மேலும் அன்பே பெரிய பலம். அன்போடு இருப்பவருக்கு உதவி செய்யும்போது சோர்வு ஏற்பட மாட்டேன் உணவு உண்ண மாட்டேன் காரியசித்தியே கண்ணாகக் கொள்வேன் என்பதை,

**வருந்தேன், என் துணை வானவன்**
**வைத்த காதல்,** (கம்ப. 4799)

அருந்தேன் இனி யாதும் என் ஆசை நிரம்பி அல்லால்,

என்று கூறுவதன்வழி அன்போடு இருப்பவருக்கு நேயமிகு உதவிகள் நேயத்தோடு தேடிவரும் என்பதோடு இச்செயல் தன் நலம் கருதா மனித நேய பண்பாகவும் கருதலாம். இவ்வாறு அனுமன் வழியில் சுயநலமின்றி வாழ்ந்து காட்டியவர் அன்னை தெரசா. அன்னை தெரசா தொழு நோயாளிகளை அன்போடு ஏற்று பணிவிடை செய்துவரும் மனித நேயர் அன்னைதெரசா. சாலையில் இருக்கும் பிச்சைக்காரர்களை பார்த்தாலே முகம் சுளிக்கும் நம்மவர்களின் மத்தியில் தொழு நோயாளிகளுக்கு வாழ்வு தந்த செம்மல் அன்னைதெரசா. தொழுநோய் உங்களுக்கும் பரவிவிடும் என்று பலர் எச்சரித்தபோதும் அதை அன்போடு ஏற்றுக் கொண்டு தொண்டு செய்தார். அதோடு ஒருமுறை அன்னை தெரசா டிராம் வண்டிகளிலே பயணிப்பதைக் கண்டுத் தன் காரை அவருக்கு அன்பளிப்பாக கொடுத்துச் சென்றிருக்கிறார் ஒருவர். ஆனால் அன்னை தெரசாவோ அந்த காரையும் விற்று அந்த பணத்தையும் தொண்டு நிறுவனத்தில் நிதியில் சேர்த்து கொண்டுள்ளார்.

**வாழ்த்து கூறும் மனித நேயம்**

வாழ்வாங்கு வாழ வாழ்த்துதல் தமிழர் மரபு. ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது வாழ்த்துகின்ற பண்பு சிறப்பிற்குரியது. வாழ்த்துவதற்கு வயது பேதம் தமிழரிடத்தில் இல்லை. பிறரைத் துன்புறுத்தாது அன்புமிகு வாழ்க்கை வாழ்ந்தவரை,

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுரையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்று தெய்வமாகவே வள்ளுவர் வாழ்த்துகின்றார். அழகான விளக்கேயானாலும் அவ்விளக்கு சுடர்விட்டு எரிய தூண்டுதல் வேண்டும். அது போல நல்ல உதவி செய்யும் பண்போடு செல்பவரை எதற்கு உதவி செய்கிறாய் இதனால் உனக்கு என்ன இலாபம் என்று கருணை இருப்பவரையும் கலக்கத்திற்கு உள்ளாக்குவோர் இவ்வுலகில் அதிகம் உள்ளனர். அவ்வாறு இருப்பவரை வளரவிடாமல் தடுக்க இப்பண்பு நலன் சிறப்புற்குரியது என்பதை பதவு செய்வது அவசியமாகின்றது. ஆக கருணை உள்ளம் கொண்டு உதவுபவரை வாழ்த்துதல் என்பது விளக்கு நன்கு எரிய உதவும் போல்பவர் அனுமன் மகேந்திரமலையைத் தாண்டி கடலைக் கடந்து சீதையை மீட்க முற்படும்போது வானலோகத்தில் இருப்பவரும் முனிவர்களும், மூன்று உலகத்தாரும் அனைவரும் அறிவிற் சிறந்த அனுமனே செல்வாயாக என கூறியதை

**இத்திறம் நிகழும் வேலை**
**இமையர்,முனிவர், மற்றும்**
**முத்திறத்து உலகத்தாரும்,முறை முறை**
**விசும்பின் மொய்ந்த்தார்,**
**தொத்து உறு மலரும் சாந்தும் சுண்ணமும்**
**மணியும் தூவி**
**வித்தக! சேறி என்றார் வீரனும், விரைவது**
**ஆனான** (கம்ப. பா. 4859)

என்று ஒரு நற்செயல் செய்பவரை வாழ்த்தும் செய்தியைப் இப்பாடல்வரிகள் விளக்கி நிற்கின்றது.

தூதுவன் உயிர்காத்த மனிதநேயம்

தூது செல்பவர் தூதிற்கு இழுக்கு நேராவண்ணம் தூது உரைத்தல் நன்று. நடந்ததைக் கூறாமல் மாற்றித் தவறான கருத்தைக் கூறுவதும் தூதுக்குத் தீமை இழைப்பதும் தூதுவனின் குணமன்று என்பதை,

**தொகச் சொல்லித் தூவாத நீக்கி**
**நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாம் தூது**

என்றார் பொய்யா புலவர் திருவள்ளுவர். அவ்வகையில் அனுமன் இராமபிரானின் ஏவலின்படி சீதாப்பிராட்டியைத் தேடி இலங்கை நகரில் வந்தபோது அங்கு சீதாதேவி அரக்கியர் சூழ இருப்பதைக் கண்டு மகிழ்கின்றான். அதே சமயம் எப்படி சீதாதேவியிடம் தான் இராமனின் தூதுவன் என உரைப்பது என சிந்தித்து தன் திறனால் அரக்கியர்கள் அனைவரையும் தூக்கத்தில் ஆழ்த்துகிறான். பின் சீதாப்பிராட்டியைக் காணுகிறான். அப்போது சீதாதேவியோ தன் நிலையை எண்ணியும் தன் குலப்பெருமையை எண்ணியும், இராமபிரான் தன்னைக் காணாது தவிக்கும் தவிப்பை எண்ணியும், தன்னை எப்படி மீட்பார் என்பது பற்றியும் பலவாறு புலம்பி தவித்து இறுதியாக தான் கற்புடையவள் என்பதை எப்படி உணர்த்த முடியும்? அது இயலாத காரியம் என முடிவு செய்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள சென்றதை,

**ஆதலான், இறத்தலே அறத்தின் ஆறு எனா**
**சாதல் காப்பவரும் என் தவத்தின் சாம்பினார்,**
**ஈது லாது இடமும் வேறு இல்லை**

(கம்ப. 5248)

என்று இறப்பதே மேல் என தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்தாள் சீதாப்பிராட்டி. இதை உணர்ந்த அனுமன் நடுவுநிலையிலும் நிற்க வேண்டும். தேவியையும் காப்பாற்ற வேண்டும். தான் இராமபிரானின் தூதுவன் என்ற நம்பிக்கையும் அளிக்க வேண்டும். சீதாதேவியின் உயிரையும் காக்க வேண்டும். மெய் தீண்டதல் நெறியன்று என்ற நிலையில் தவித்துக் கொண்டு இருந்த சொல்லின் செல்வன் தன் சொற்திறத்தால் உயிர்காக்கும் உயர்நெறியில் செயல்பட்டதை,

**கண்டனன் அனுமனும்ஞு கருத்தும் எண்ணினாள்,**
**கொண்டனன் துணுக்கம்ஞு மெய் தீண்டக் கூசுவான்,**
**அண்டர் நாயகன் அருள் தூதன் யான்- எனா,**
**தொண்டை வாய் மயிலினைத் தொழுது, தோன்றினான்.**

(கம்ப. 5249)

என்பதன் வழி அனுமன் இராம நாமத்தைக் குறிப்பாக சொன்னதன்வழி சீதாதேவியின் உயிரைக் காப்பாற்றினான். இதை உணர்ந்த தேவி அனுமானின் செயல்களால் நற்தூதன் என்று உணர்ந்ததோடு அவன் எக்குலத்தில் இருப்பவனாக இருந்தாலும் உயிரைக் காத்தவன் என்பதை,

**அரக்கனே ஆகஞு வேறு ஓர் அமரனே ஆகஞு அன்றிக்**
**குரக்கு இனத்து ஒருவனேதான் ஆகுகஞு கொடுமை ஆகஞு**
**இரக்கமே ஆகஞு வந்து, இங்கு, எம்பிரான் நாமம் சொல்லி,**
**உருக்கினன் உணர்வைஞு தந்தான் உயிர்ஞு இதின் உதவி உண்டோ?**

(கம்ப. 5254)

என்ற நன்றி உணர்வோடும் அனுமன் மேல் கொண்ட உயர் எண்ணத்திலும் கூறிய செயல்வழி சீதாதேவியின் உள்ளப்பாங்கு புலப்படும். இவ்வாறு அனுமன் சீதாதேவியின்

உயிரைக்காத்து, இராமன் வருவான், தன்னை மீட்பான் என்ற நம்பிக்கையூட்டி தூதிற்குச் சிறப்பு செய்தான். அதோடு இராமபிரானிடமும் சென்றதும் குறிப்பினாலேயே சீதாப்பிராட்டியை கண்டதை உணர்த்தியதோடு நன்மொழியும் நேயத்தோடு மொழிவதை ‘கண்டனென் , கற்பினும் அணியைக் கண்களால்: என்றதோடு உலக நாயகனான இராமனிடன் ‘அண்டர் நாயக! இனி துறத்தி ஐயமும் பண்டு உளதுயரும்’ என மிகத் தெளிவாக இராமனின் துயர் துடைத்த நற்தூதனாக அனுமன் விளங்கினான். மேலும் அனுமன் இராமனின் துயர் துடைக்க இலங்கைக்குச் சென்று தீதுள்ள அரக்கர்களை அழிக்க முற்பட்டாலும் அரக்கர்களின் விபீடணன் போல தீதற்ற கருணை உள்ளம் கொண்டவர்களையும் இனம் கண்டு உணரும் கருணை உள்ளம் கொண்டவனாக அனுமன் விளங்கினான்.

இவ்வாறு சுந்தரகாண்டத்தில் மனித உயிருக்கு மட்டுமன்றி பிற உயிர்களின்மீதும் நேயம் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அனுமனின் உள்ளக்குறிப்பும், உயிர்க்காக்கும் பண்பும்,தூது உரைத்தல் சிறப்பும், பகைவனேயாயினும் பண்பாளனா? என ஆராயும் உள்ளக் கருணையும் பகுத்தறிவுள்ள மனித பிறப்பிற்கு அவசியம் என்பதை தெளிவுபடுத்துகின்றது. ஆக, உலக உயிர்களிடம் நேயம் காத்தல் என்பது உலக நன்மைக்கு வழிவகுக்கும் என்ற நோக்கத்தில் இக்கட்டுரை ஆராயப்பட்டது. வாழ்க உயிர் நேயம். வளர்க உலக ஒற்றுமை.

❖❖❖